

# தமிழ்நாடு மாநில திருநங்கையர் கொள்கை 2025

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை

# தமிழ்நாடு மாநில
# திருநங்கையர் கொள்கை
# 2025

# பொருளடக்கம்


| அத்தியாயம் | பொருள் | பக்க எண் |
| --- | --- | --- |
| **I.** | **முகவுரை மற்றும் கண்ணோட்டம்** | |
| | 1.1 முகவுரை | 1 |
| | 1.2 வரையறை | 1 |
| | 1.3 நடப்பு சூழ்நிலை | 2 |
| | 1.4 உலகளாவிய சூழல் | 3 |
| | 1.5 இந்திய நிலவரம் | 3 |
| | 1.6 மாநிலத்தின் கண்ணோட்டம் | 5 |
| **II.** | **தொலைநோக்கு, செயல் இலக்கு மற்றும் குறிக்கோள்கள்** | |
| | 2.1 தொலைநோக்கு | 8 |
| | 2.2 செயல் இலக்கு | 8 |
| | 2.3 குறிக்கோள்கள் | 9 |
| **III.** | **கொள்கைகள் மற்றும் உத்திகள்** | |
| | 3.1 பாலின அடையாளத்திற்கான உரிமை | 12 |
| | 3.2 கண்ணியம் மற்றும் சமத்துவத்திற்கான உரிமை | 13 |
| | 3.3 கருத்து சுதந்திரத்திற்கான உரிமை | 14 |
| | 3.4 ஆரோக்கியத்திற்கான உரிமை | 15 |
| | 3.5 கல்விக்கான உரிமை | 17 |
| | 3.6 வேலை வாய்ப்பிற்கான உரிமை | 18 |
| | 3.7 வேலைவாய்ப்பு மற்றும் கல்வி நிறுவனங்களில் பிரதிநிதித்துவத்திற்கான உரிமை | 20 |
| | 3.8 குடியிருப்பு மற்றும் தங்குவதற்கான உரிமை | 20 |
| | 3.9 தீர்வுக்கான உரிமை | 21 |
| | 3.10 பிற உரிமைகள் | 23 |
| **IV.** | **செயலாக்கம் மற்றும் கண்காணிப்பு** | |
| | 4.1 செயலாக்கம் | 24 |
| | 4.2 கண்காணிப்பு | 24 |
| | 4.3 செல்லுபடியாகும் காலம் | 27 |
| | 4.4 முடிவுரை | 28 |
| **V.** | **இணைப்பு** | |
| | 5.1 முக்கியமான தரவுகள் | 29 |
| | 5.2 சொல்விளக்கத் திரட்டு | 31 |

# தமிழ்நாடு மாநில திருநங்கையர் கொள்கை 2025

## அத்தியாயம் I

## முகவுரை மற்றும் கண்ணோட்டம்

### 1.1. முகவுரை

மனித உரிமைகள் என்பது அனைவருக்கும் பொதுவானவை மற்றும் மறுக்க முடியாதவை. பாலின அடையாளம் மற்றும் வெளிப்பாடு, பாலியல் நோக்குநிலை மற்றும் பாலின பண்புகள் ஆகியவற்றைப் பொருட்படுத்தாமல் அனைவரும் ஒரே மாதிரியான அடிப்படை உரிமைகளை அனுபவிக்க வேண்டும். இந்திய அரசியலமைப்பு மற்றும் பல்வேறு ஐக்கிய நாடுகள் சபை பிரகடனங்களின் கீழ் உத்தரவாதம் அளிக்கப்பட்ட மனித உரிமைகள் திருநங்கையர் சமூக மக்களுக்கு மறுக்கப்படுகின்றன. அவர்கள் தங்கள் வாழ்க்கையின் அனைத்துத் துறைகளிலும் ஓரங்கட்டப்படுதல், வன்முறை மற்றும் பாகுபாட்டை எதிர்கொள்கின்றனர், மேலும் பாகுபாடு மற்றும் வன்முறைக்கு பயந்து தங்கள் அடையாளங்களையும், உண்மையான தன்மையையும் மறைக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். பாகுபாடு என்பது நீண்டகாலமாக நிலவும் ஒன்றாகும், மேலும் அவர்கள் தங்கள் மனித உரிமைகளை அனுபவிக்கவும், தங்கள் வாழ்க்கைத் திறனை உணரவும், சமூகத்தில் ஒரு சூழலை உருவாக்க "அனைத்து சமூகமும், அனைத்து அரசாங்கமும்" என்ற அணுகுமுறை தேவைப்படுகிறது. வீடு, கல்விக் கூடங்கள், பணியிடங்கள் மற்றும் பொது இடங்களில் ஒதுக்கப்படுதல் மற்றும் பாகுபாட்டை எதிர்கொள்ளும் நபர்களைப் பாதுகாக்கும் குறிப்பிட்ட கொள்கைகள் தற்போது இல்லை.

### 1.2. வரையறை

திருநங்கையர் என்பது, பிறப்பின் போது அறியப்படும் பாலினத்திலிருந்து வேறுபட்ட பாலின உணர்வைக் கொண்டவர்களைக்

குறிக்கப் பயன்படுத்தப்படும் ஒரு பொதுவான சொல். இதில் திருநங்கைகள், திருநம்பி மற்றும் இடைப்பாலின நபர்கள் அடங்குவர். பலர் தங்கள் பாலின அடையாளத்தை உறுதிப்படுத்த அல்லது வெளிப்படுத்துவதற்காக, தங்கள் உடல் தோற்றத்தை, உடை அணியும் விதத்தை மாற்றுகிறார்கள்.

திருநங்கையர் (உரிமைகள் பாதுகாப்பு) சட்டம், 2019 (மத்திய சட்டம் 40, 2019) இன் படி, "திருநங்கைகள்" என்பது பிறக்கும் போது அந்த நபருக்கு அடையாளப்படுத்தப்பட்ட பாலினத்துடன் பொருந்தாத பாலினத்தைக் கொண்ட ஒரு நபரைக் குறிக்கிறது. இதில் திருநங்கை அல்லது திருநம்பி (அந்த நபர் பாலின மறுசீரமைப்பு அறுவை சிகிச்சை அல்லது உடலியக்கச் சிகிச்சை அல்லது கதிர் ஒளி சிகிச்சை அல்லது அத்தகைய பிற சிகிச்சைக்கு உட்பட்டிருந்தாலும் இல்லாவிட்டாலும்) இடைப்பாலின வேறுபாடுகள் உள்ள நபர் மற்றும் கின்னர், ஹிஜ்ரா, அரவாணி மற்றும் ஜோக்தா போன்ற சமூக-கலாச்சார அடையாளங்களைக் கொண்ட நபர் ஆகியோர் அடங்குவர். இடைப்பாலினத்தவர் என்பது, பிறக்கும்போதே தனது முதன்மை பாலியல் பண்புகள், வெளிப்புற பிறப்புறுப்புகள், மரபணுக்கள் அல்லது உடலியக்கச் சுரப்பி போன்றவற்றில் ஆண் அல்லது பெண் உடலின் இயல்பான தரத்திலிருந்து மாறுபாட்டைக் காட்டும் ஒரு நபர் ஆவார்.

## 1.3. நடப்பு சூழ்நிலை

இந்தியாவில், 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, மொத்த திருநங்கைகளின் எண்ணிக்கை சுமார் 4.88 லட்சமாக இருந்தது. தமிழ்நாட்டில் திருநங்கைகளின் எண்ணிக்கை 22,364 என அறிவிக்கப்பட்டது. திருநங்கையர் சமூகம் என்பது சாதி, மதம், இனம், நிறம், வயது, மக்கள்தொகை போன்ற பிற சமூக வகைகளைக் கடந்து செல்லும் ஒரு குறுக்குவெட்டு சமூகமாகும்.

சமூக நீதியின் பூமி என்று அழைக்கப்படும் தமிழ்நாடு, இந்த பாதிக்கப்படக்கூடிய பிரிவினர் தங்கள் உரிமைகளை அனுபவித்து,

கண்ணியத்துடன் வாழ ஆதரவளிப்பதில் முன்னணியில் உள்ளது. திருநங்கைகளின் வாழ்க்கையை மேம்படுத்த பல்வேறு உறுதியான திட்டங்களை விரிவுபடுத்துவதற்காக 'திருநங்கைகள் நல வாரியத்தை' நிறுவிய முதல் மாநிலம் தமிழ்நாடு ஆகும்.

இருப்பினும், திருநங்கைகளின் முன்னேற்றத்திற்கு கூடுதல் நடவடிக்கைகள் தேவை என்பதை அரசு அங்கீகரித்து, அவர்களுக்காக பிரத்யேக மாநிலக் கொள்கையை உருவாக்க உறுதி பூண்டுள்ளது. பாலின அடையாளம், வெளிப்பாடு மற்றும் பாலின பண்புகள் ஆகியவற்றின் அடிப்படையில் சமூக பாகுபாட்டைக் குறைக்க இந்தக் கொள்கை முயல்கிறது.

## 1.4. உலகளாவிய சூழல்

2015–ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் சபை 17 நிலையான வளர்ச்சி இலக்குகளின் (உலகளாவிய இலக்குகள் என்றும் அழைக்கப்படுகிறது) பட்டியலை வெளியிட்டது. இந்த இலக்குகளை நிறைவேற்றுவதற்கான காலக்கெடு 2030 ஆம் ஆண்டாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த இலக்குகள் உறுப்பு நாடுகள் தங்கள் நிகழ்ச்சி நிரல் மற்றும் கொள்கைகளை வகுத்து, மிகவும் நிலையான எதிர்காலத்தை அடைவதற்கான ஒரு வரைபடத்தை வழங்குகின்றன. நிலையான வளர்ச்சி இலக்குகளின் முக்கிய தூண் "யாரையும் பின்தங்க விட்டுவிடக்கூடாது" என்ற வாக்குறுதியாகும். இந்த கொள்கை அவர்களின் உண்மையான அல்லது உணரப்பட்ட பாலின அடையாளம், வெளிப்பாடு மற்றும் பாலின பண்புகளின் அடிப்படையில் சமூகத்திலிருந்து விலக்கப்பட்ட திருநங்கையர் மற்றும் இடைப்பாலினத்தவர் சமூகங்களுக்கு மிகவும் பொருத்தமானது.

## 1.5. இந்திய நிலவரம்

இந்தியா போன்ற ஒரு நாட்டில், ஒரு நபரின் அடையாளம் பாலினம், இனம், சாதி, மதம், சமூகம் போன்ற மக்கள் தொகை பண்புகளில் ஆழமாக வேரூன்றி இருப்பதால், திருநங்கையர் மற்றும் இடைப்பாலின சமூகங்கள்

பல்வேறு வகையான பாகுபாடு மற்றும் வன்முறையை எதிர்கொள்கின்றனர், இது அவர்களின் சட்டபூர்வமான உரிமைகளை மறுக்கின்றது. திருநங்கையர் மற்றும் இடைப்பாலின சமூகங்களைச் சேர்ந்த பாலினத்தை உறுதிப்படுத்தாத நபர்கள் மற்றும் அவர்களின் விருப்பமான பெயரில் அரசாங்க ஆவணங்கள் மற்றும் சுய உறுதிப்படுத்தப்பட்ட பாலினம் இல்லாதவர்கள், அத்தியாவசிய சேவைகளுக்கான அணுகல் மறுக்கப்பட்டு மற்றும் பொருளாதார பங்கேற்புக்கான குறைந்த வாய்ப்புகளைக் கொண்டுள்ளனர்.

2011 மக்கள் தொகை கணக்கெடுப்பில், ஆண்–பெண் இருமைக்கு வெளியே, முதன்முறையாக திருநங்கையர் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டு நாட்டில் 4.88 லட்சம் அத்தகைய நபர்கள் இருப்பதை வெளிப்படுத்தி உள்ளது.

இந்திய அரசியலமைப்பின் பிரிவு 21, ஒவ்வொரு நபருக்கும் வாழ்க்கை மற்றும் தனிப்பட்ட சுதந்திரத்திற்கான உரிமை உண்டு என்று கூறுகிறது. பல்வேறு சட்டமன்ற நடவடிக்கைகள் மற்றும் நீதித்துறை தீர்ப்புகள் மூலம் இந்த விதியின் நோக்கம் அதன் தொடக்கத்திலிருந்து பெருமளவில் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. வாழும் உரிமை என்பது வெறும் இருப்புடன் அல்லாமல் மனித கண்ணியத்துடன் வாழும் உரிமை என்று இப்போது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

2014–ஆம் ஆண்டு NALSA vs இந்திய ஒன்றியம் வழக்கில் உச்ச நீதிமன்றத் தீர்ப்பின்படி, திருநங்கையரின் அரசியலமைப்பு உரிமைகளை அங்கீகரித்தல், திருநங்கையர் (உரிமைகள் பாதுகாப்பு) சட்டம், 2019 (மத்திய சட்டம் 40/2019) மற்றும் விதிகள் (2020) ஆகியவற்றின் அறிவிக்கை திருநங்கையர் என்ற குடையின் கீழ் திருநங்கை, திருநம்பி மற்றும் இடைப்பாலின நபர்களை உள்ளடக்கியதாகவும், திருநங்கையருக்கு எதிராக பல்வேறு துறைகளில் பாகுபாடு மற்றும் நியாயமற்ற முறையில் நடத்தப்படுவதைத் தடை செய்தல் போன்ற முக்கியமான நீதித்துறை மற்றும் சட்டமன்ற முன்னேற்றங்கள் ஏற்பட்டு உள்ளன.

## 1.6. மாநிலத்தின் கண்ணோட்டம்

அனைத்து மனிதர்களுக்கும் சம உரிமைகள் மற்றும் சமமான சிகிச்சை ஆகியவற்றின் முக்கியத்துவத்தை உணர்ந்த முதல் மாநிலம் தமிழ்நாடு ஆகும். பல நாடுகள் திருநங்கைகளை ஏற்றுக்கொண்டு அவர்களுக்கு சமூக மற்றும் சட்ட அடையாளத்தை வழங்குவதற்கு சிரமப்பட்டபோது, தமிழ்நாடு அவர்களின் அங்கீகாரத்திற்காக வலுவான வாதத்தை முன்வைத்து, 2008 ஆம் ஆண்டில் தமிழ்நாடு திருநங்கை நல வாரியத்தை அமைப்பதில் முக்கிய பங்கு வகித்ததுள்ளது.

திருநங்கைகள் நல வாரியம், பல்வேறு துறைகளுடன் இணைந்து திருநங்கையரின் நலனுக்காக பல சமூக மற்றும் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை மூலம், பின்வரும் சேவைகள் வழங்கப்படுகின்றன: –

- அடையாள அட்டை – திருநங்கையரின் பாலினம் மற்றும் பெயரைச் சான்றளிக்கும் அடிப்படை ஆவணம். ஆதார் அட்டை, வாக்காளர் அடையாள அட்டை, குடும்ப அட்டை போன்ற பிற முக்கிய ஆவணங்களைச் சரிசெய்வதற்கு அடையாள அட்டை முதன்மையான தேவையாகும். திருநங்கைகள் தங்கள் விவரங்களைப் பதிவு செய்து, அடையாள அட்டையை எளிதாகப் பெறுவதற்கு "திருநங்கைகள்" என்ற பிரத்யேக கைபேசி செயலி உருவாக்கப்பட்டுள்ளது. இது அவர்களின் வயது, கல்வித் தகுதி, வசிப்பிடம் போன்ற விவரங்களைப் பதிவு செய்வதன் மூலம், அவர்களுக்கான நலத்திட்டங்களை வகுக்க உதவுகிறது. ஆதார் எண் மட்டும் கட்டாயமாக்கப்பட்டு, மருத்துவச் சான்றிதழ், குடும்ப அட்டை, வாக்காளர் அடையாள அட்டை, நிலை கணக்கு எண் (PAN Card) அட்டை, பிரமாணப் பத்திரம், இருப்பிடச் சான்றிதழ் போன்ற மற்ற ஆவணங்கள் கட்டாயமற்றவை என அறிவிக்கப்பட்டு, இந்த செயல்முறை எளிமைப்படுத்தப்பட்டுள்ளது.

- திறன் பயிற்சி – சுயதொழில் தொடங்குவதற்கான திறன்களை மேம்படுத்த
- சுயதொழில் தொடங்குவதற்கான நிதி உதவி – அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த
- உயர்கல்விக்கான ஆதரவு – திருநங்கையர் மற்றும் இடைப்பாலின நபர்கள் உயர்கல்வி பெற ஊக்குவித்தல், மற்றும் வேலைவாய்ப்புக்குத் தங்களை தயார்படுத்திக் கொள்ள
- தனித்துவ திருநங்கை தையல் தொழில் கூட்டுறவு சங்கம் சுயதொழில் தொடங்க ஆதரவளித்து, வருமானம் ஈட்ட உதவிட

வருவாய்த் துறையுடன் இணைந்து, திருநங்கை மற்றும் இடைப்பாலின நபர்களுக்கு வழங்கப்படும் சேவைகள் :

- குடும்ப அட்டை – உணவுப் பாதுகாப்பை உறுதி செய்திட
- வீட்டு மனைப் பட்டாக்கள் – வீடற்றவர்களுக்கு வீட்டு வசதியை வழங்கிட மற்றும்
- வாக்காளர் அடையாள அட்டை – தங்கள் வாக்களிக்கும் உரிமையைப் பயன்படுத்தவும், தேசக் கட்டுமானத்தில் தீவிரமாக பங்கேற்றிட.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மூலம், பட்டா பெற்ற தகுதியுள்ள திருநங்கையர் மற்றும் இடைப்பாலின நபர்களுக்கு பாதுகாப்பான தங்குமிடத்தை உறுதி செய்வதற்காக இலவச வீட்டுவசதித் திட்டங்கள் வழங்கப்படுகின்றன. மேலும், சுய உதவிக் குழுக்கள் உருவாக்கப்பட்டு, வங்கிச் சேவைகளுடன் இணைத்து, கடன் இணைப்புகளைப் பெற உதவுவதன் மூலம் அவர்களுக்கான அதிகாரம் மேம்படுத்தப்படுகிறது.

திருநங்கையர் மற்றும் இடைப்பாலின நபர்கள் முறையான சுகாதாரப் பராமரிப்பைப் பெற மருத்துவக் காப்பீடு உள்ளிட்ட மருத்துவ வசதிகளை சுகாதாரத் துறையின் மூலம் வழங்கப்படுகிறது.

திருநங்கையர் மற்றும் இடைப்பாலின நபர்களால் பல்வேறு துறைகளின் வசதிகள் மற்றும் சேவைகளைப் பெறுவதற்கான செயல்முறையை எளிதாக்குவதற்கு சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை ஒருங்கிணைப்புத் துறையாக செயல்படுகிறது.

# அத்தியாயம் II

## தொலைநோக்கு, செயல் இலக்கு மற்றும் குறிக்கோள்கள்

### 2.1. தொலைநோக்கு

திருநங்கையர் மற்றும் இடைப்பாலின நபர்கள் தங்கள் அடையாளம் மற்றும் உடலமைப்பு மீது சுயநிர்ணயத்துடனும் பாகுபாடு, வன்முறையிலிருந்து விடுபட்டு, தங்கள் உரிமைகளை அணுகவும் பாதுகாப்பை உறுதி செய்யவும் கூடிய ஒரு நியாயமான, சமமான மற்றும் வளமான சமூகத்தை உருவாக்குதல்.

### 2.2. செயல் இலக்கு

இந்தக் கொள்கை திருநங்கையர் மற்றும் இடைப்பாலின நபர்கள் தங்கள் உரிமைகளை பெறுவதற்கான தடைகளை நீக்கி, அவற்றை அணுகுவதை எளிதாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

(i) பாலின அடையாளம்
(ii) கண்ணியம் மற்றும் சமத்துவம்
(iii) குடும்பத்துடன் வாழ்வது
(iv) கல்வி
(v) வேலைவாய்ப்பு
(vi) சுகாதாரப் பராமரிப்பு
(vii) பொருட்கள் மற்றும் வசதிகளை அணுகுதல்
(viii) இயக்கம்
(ix) அவர்கள் விரும்பும் குடும்பங்களை உருவாக்குதல் (பாலின உறவுகள்)
(x) சொத்துக்களை சொந்தமாக வைத்திருக்க, மரபுரிமையாகப் பெற அல்லது பரிசளிக்க
(xi) பொது அல்லது தனியார் பதவியை வகிக்க

(xii) ஒரு சொத்தில் வசிக்க, வாடகைக்கு அல்லது மற்ற வகையில் குடியிருக்க

(xiii) அரசு அல்லது தனியார் நிறுவனத்தை திருநங்கையர் அணுகிட

## 2.3. குறிக்கோள்கள்

இந்தக் கொள்கையின் நோக்கங்கள்:

- அனைத்து திருநங்கையர் மற்றும் இடைப்பாலின நபர்களும் எந்தவிதமான பாகுபாடு மற்றும் ஓரங்கட்டப்படுதலும் இல்லாமல் நியாயமாகவும் சமமாகவும் நடத்தப்படும் ஒரு சூழலை உருவாக்குதல்
- திருநங்கையர் மற்றும் இடைப்பாலின நபர்கள் அவர்களின் முழு திறனையும் உணர அதிகாரம் அளித்தல்
- திருநங்கையர் மற்றும் இடைப்பாலின நபர்களுக்கான பயனுள்ள சமூக ஒருங்கிணைப்பை உறுதி செய்வதற்காக அனைத்து பங்குதாரர்களின் தன்னார்வ நடவடிக்கை மற்றும் பங்கேற்பை ஊக்குவித்தல்
- மாநிலத்தில் திருநங்கையர் மற்றும் இடைப்பாலின நபர்களுக்கான உரிமைகள் மற்றும் உரிமை தகுதிகளைப் பாதுகாப்பதற்கான வெளிப்புற நடவடிக்கைகளை விரிவுபடுத்துதல்
- வேலைவாய்ப்பு சுயதொழில் மற்றும் பிற சமூக கல்வி சேவைகளுக்கு திருநங்கையர் மற்றும் இடைப்பாலின நபர்களுக்கான தனிநபர் மற்றும் குழு முயற்சிகளை ஊக்குவித்தல்
- தற்போது நடைமுறையில் உள்ள செயல்பாடுகளை வலுப்படுத்துதல் மற்றும் மாநிலத்தில் உள்ள அனைத்து திருநங்கையர் மற்றும் இடைப்பாலின நபர்களுக்கான வசதிகளை உருவாக்குதல்.
- சமூக உள்ளடக்கத்தை உறுதி செய்வதற்காக கல்வி வசதிகள், சுகாதார வசதிகள், நீர் வழங்கல், சுகாதாரம், வீட்டு வசதிகள் போன்ற அடிப்படை வசதிகளை வழங்குதல்
- அரசு துறைகள், பொது அலுவலர்கள் மற்றும் தொடர்புடைய தனியார் பங்குதாரர்கள், திருநங்கையர் மற்றும் இடைப்பாலின நபர்களுக்கு

உள்ளடக்கிய மற்றும் பாகுபாடற்ற அணுகுமுறையை கடைபிடிப்பதை உறுதி செய்தல்

- பெற்றோர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், மருத்துவர்கள், மனநல நிபுணர்கள், காவல்துறை, நீதித்துறை மற்றும் பிற முக்கிய பொது பணியாளர்கள் ஆகியோருக்கு விழிப்புணர்வு அளித்து, திருநங்கையர் மற்றும் இடைப்பாலின நபர்களுக்கு எதிரான அனைத்து வகையான வன்முறை மற்றும் பாகுபாடுகளையும் ஒழித்தல்
- திருநங்கை மற்றும் இடைபாலின நபர்களின் நலனுக்காக, இலக்கு சார்ந்த மற்றும் கவனம் செலுத்தும் அணுகுமுறையை உருவாக்கி அரசுத் துறைகளில் உள்ள தற்போது செயல்படுத்தப்படும் திட்டங்களை ஒருங்கிணைத்தல்.

# அத்தியாயம் III

## கொள்கைகள் மற்றும் உத்திகள்

தமிழ்நாடு மாநில திருநங்கையர் கொள்கையானது இந்திய அரசியலமைப்பின் பிரிவுகள் 14, 15 மற்றும் 21 –இன் கீழ் உள்ள அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பதையும், திருநங்கையர் மற்றும் இடைபாலின நபர்களைப் பொது சமூகத்துடன் இணைக்கும் நோக்கத்துடன் உரிமைகளைச் செயல்படுத்துவதையும், சேவைகளை அளிப்பதையும் உறுதி செய்கிறது.

திருநங்கைகள் (உரிமைப் பாதுகாப்பு) சட்டம், 2019 மற்றும் விதிகள் (2020) ஆகியவை NALSA தீர்ப்புக்கான சட்டபூர்வமான நடவடிக்கையாக அமைந்துள்ளன. இச்சட்டம் மற்றும் விதிகள் மாற்றுப்பாலின ஆண், மாற்றுப்பாலின பெண் மற்றும் இடைபாலின நபர்கள் தங்கள் பாலினத்தை திருநங்கைகள் ஆண் அல்லது பெண் என சட்டப்பூர்வமாக மாற்றுவதற்கான வழிமுறையை வழங்குகிறது. இச்சட்டம் (i) கல்வி (ii) வேலைவாய்ப்பு (iii) சுகாதாரம் (iv) பொது மக்களுக்கு கிடைக்கும் பொருட்கள், வசதிகள், வாய்ப்புகளை அணுகுதல் அல்லது அனுபவித்தல் (v) ஓரிடத்திலிருந்து மற்றோரிடம் செல்வதற்கான உரிமை (vi) ஒரு சொத்தில் வசிக்க, வாடகைக்கு அல்லது வேறு எந்த விதமாக இருப்பதற்கான உரிமை (vii) பொது அல்லது தனியார் அலுவலகம் நடத்த வாய்ப்பு (viii) ஒரு திருநங்கையின் பராமரிப்பில் அல்லது காவலில் இருக்கும் அரசு அல்லது தனியார் நிறுவனத்தினை அணுகுதல் ஆகியவை தொடர்பாக எந்தவொரு சேவையையும் மறுப்பது அல்லது நியாயமற்ற முறையில் நடத்துவது உட்பட திருநங்கைகளுக்கு எதிரான பாகுபாட்டைத் தடுக்கிறது.

இதை முன்னோக்கி எடுத்துச் செல்லும் வகையில், திருநங்கைகள் மற்றும் இடைபாலின நபர்களுக்கு கட்டாயமாக வழங்கப்பட வேண்டிய உரிமைகள் பின்வருமாறு விவரிக்கப்பட்டுள்ளன.

### 3.1. பாலின அடையாளத்திற்கான உரிமை

பாலின அடையாளம் என்பது, பிறப்பின் போது அறியப்பட்ட பாலினம் மற்றும் தொடர்புடைய பாலினத்திலிருந்து சமூகத்தின் எதிர்பார்ப்புகளைப் பொருட்படுத்தாமல், ஒரு தனி நபர் தனது சொந்த பாலினத்தை எவ்வாறு வரையறுக்கிறார் என்பதைக் குறிக்கிறது. பாலின அடையாளம் ஒரு நபரால் சுயமாக தீர்மானிக்கப்படுகிறது. திருநங்கையர் எந்த வகையான மருத்துவ சிகிச்சை அல்லது சான்றிதழும் தேவையில்லாமல், தங்கள் பாலினத்தை சுயமாக தீர்மானிக்கவும் மற்றும் அனைத்து அடையாள ஆவணங்களிலும் தங்கள் பாலினத்தை ஆண், பெண் அல்லது மூன்றாம் பாலினமாக மாற்ற ஏதுவாகவும் இருக்க வேண்டும்.

- திருநங்கைகள் (உரிமைகள் பாதுகாப்பு) சட்டம், 2019 –இன் விதிகளின்படி, மாநிலத்தின் அதிகார வரம்பிற்குள் வாழும் திருநங்கைகள் மற்றும் இடை பாலின நபர்களை அடையாளம் காணவும், இணையதளத்தில் அல்லது நேரடியாக விண்ணப்பிக்கும் அனைவருக்கும் அடையாள அட்டைகளை வழங்கி அவர்களுக்குரிய திட்டங்களில் பயனடையச் செய்யவும் அரசு முயற்சிகளை மேற்கொள்ளும்.
- சட்டம் மற்றும் விதிகளின்படி, பாலினத்தை தீர்மானிக்கும் உரிமை சம்பந்தப்பட்ட திருநங்கைகள் மற்றும் இடைபாலின நபர்களுக்கு இருப்பதை அரசு உறுதி செய்யும், மேலும் யாரிடமிருந்தும் எந்தவிதமான அழுத்தம், நிர்பந்தம் அல்லது தாக்கம் இல்லாமல் இருப்பதை அரசு உறுதி செய்யும்.
- அனைத்து நிறுவனங்களும் / அமைப்புகளும் உரிய அதிகாரிகளால் வழங்கப்பட்ட இந்த அடையாள அட்டைகளை ஏற்றுக் கொள்ளும்

மற்றும் சட்டம் மற்றும் மத்திய, மாநில அரசுகளின் பல்வேறு திட்டங்களின்கீழ் அனைத்து நன்மைகளையும் வழங்கும்.

- ஆண், பெண் திருநங்கை மற்றும் இடைபாலின நபர் என சுய அடையாளத்தைப் பொருட்படுத்தாமல், தேசிய/ மாநில அடையாள அட்டை வைத்திருக்கும் நபர் மத்திய/ மாநில திட்டங்களில் பயன்பெறத் தகுதியானவர் ஆவார்.

## 3.2. கண்ணியம் மற்றும் சமத்துவத்திற்கான உரிமை

அனைத்து திருநங்கைகள் மற்றம் இடைபாலின நபர்களின் கண்ணியம் மற்றும் சமத்துவத்திற்கான உரிமையை உறுதி செய்வதற்கு, பொது மற்றும் தனியார் துறைகளைச் சேர்ந்த அனைத்து பங்குதாரர்கள் மற்றும் சேவை அளிப்போருக்கு தகுந்த விழிப்புணர்வு அளிக்கப்பட வேண்டும்.

திருநங்கைகள் சட்டம் மற்றும் விதிகளில் குறிப்பிடப்படுள்ள கீழ்க்காணும் வழிமுறைகளை அரசு கடைபிடிக்கும்.

"எந்தவொரு நபராலோ அல்லது ஒரு அமைப்பின் நிறுவனத்தினாலோ ஒரு திருநங்கை மீது பின்வரும் எந்த ஒரு காரணத்திற்காகவும் பாகுபாடு காட்டப்பட மாட்டாது".

திருநங்கையர் மீது பின்வரும் எந்த காரணத்திற்காகவும் தனிநபரோ / அமைப்புகளோ எவ்வித பாகுபாடும் இன்றி நடத்தப்பட வேண்டும்.

- கல்வி நிறுவனங்கள் மற்றும் அதன் சேவைகளில் மறுப்பு அல்லது கல்வி பயில்வதைத் தடுத்தல் அல்லது நியாயமற்ற முறையில் நடத்துதல்.
- வேலை அல்லது தொழிலில் நியாயமற்ற முறையில் நடத்துதல்
- வேலை அல்லது தொழில் புரிவதை மறுத்தல் அல்லது தடுத்தல்
- சுகாதார சேவைகளை மறுத்தல் அல்லது தடுத்தல் அல்லது நியாயமற்ற சிகிச்சை

- பொதுமக்களின் பயன்பாட்டிற்காக ஒதுக்கப்பட்ட அல்லது பொதுவாகக் கிடைக்கக்கூடிய பொருட்கள், தங்குமிடம், சேவை, வசதி, நன்மை, சலுகை அல்லது வாய்ப்பை அணுகுவதை மறுத்தல், தடுத்தல் மற்றும் நியாயமற்ற முறையில் நடந்து கொள்ளுதல்.
- இடம்பெயர்வதற்கான / ஓரிடத்திலிருந்து மற்றோரிடம் செல்வதற்கான உரிமையை மறுத்தல் அல்லது தடுத்தல் அல்லது நியாயமற்ற முறையில் நடத்துதல்.
- ஏதேனும் ஒரு சொத்தை வாங்க, வாடகைக்கு அல்லது வேறுவிதமாக ஆக்கிரமிப்பதற்கான உரிமையை மறுத்தல் அல்லது தடுத்தல் அல்லது நியாயமற்ற முறையில் நடத்துதல்
- பொது அல்லது தனியார் அலுவலகத்திற்காக செயல்பட அல்லது நடத்துவதற்கான வாய்ப்பை மறுத்தல் அல்லது தடுத்தல் அல்லது நியாயமற்ற முறையில் நடத்துதல் மற்றும்
- திருநங்கை ஒருவரின் பராமரிப்பில் அல்லது காவலில் இருக்கும் அரசு அல்லது தனியார் நிறுவனத்தை அணுகுவதைத் தடுத்தல், அகற்றுதல் அல்லது நியாயமற்ற முறையில் நடத்தப்படுதல்

## 3.3. கருத்து சுதந்திரத்திற்கான உரிமை

இந்திய அரசியலமைப்பின் பிரிவு 19 ஆனது, அனைத்து குடிமக்களுக்கும் வாழ்வதற்கான உரிமை, சமத்துவம் மற்றும் பேச்சு மற்றும் கருத்துச் சுதந்திரம் ஆகியவற்றில் உள்ளார்ந்த தனியுரிமைக்கு உரிமை உண்டு என்று கூறுகிறது. இது திருநங்கைகள் மற்றும் இடைபாலின நபர்கள் உட்பட அனைத்து குடிமக்களுக்கும் பொருந்தும்.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் கூறப்பட்டுள்ள கருத்துச் சுதந்திரத்தை அனைத்து திருநங்கைகள் மற்றும் இடைபாலினத்தவர்களும் அனுபவிப்பதை அரசு உறுதி செய்யும். பேச்சு, உடை, உடற் பண்புகள் மற்றும் பெயர் தேர்வு மூலம் அடையாளம் அல்லது ஆளுமையை வெளிப்படுத்தும் உரிமைகளும் இதில் அடங்கும்.

திருநங்கைகள் நல வாரியம், திருநங்கைகளிடையே கலைத் திறன்களைக் கண்டறிந்து. மேம்படுத்தி, வளர்ப்பதற்குப் பாடுபடுவதோடு, கலை, நடனப் பள்ளிகள் போன்றவற்றை அந்தந்தப் பகுதிகளில் திறமையான நபர்களைக் கொண்டு நிறுவி, கலாச்சார மற்றும் பொழுதுபோக்கு நடவடிக்கைகள் மற்றும் செயல்பாடுகளில் அவர்கள் பங்கேற்பதை ஊக்குவிக்கும்.

திருநங்கைகளின் வாழ்க்கை, பாதுகாப்பு, உடல்நலம் அல்லது நல்வாழ்வை குலைக்கும் விதமாக திருநங்கைகளுக்கு உடல் ரீதியாகவோ அல்லது மன ரீதியாகவோ, யாரேனும் தீங்கு செய்தாலோ அல்லது காயப்படுத்தினாலோ அல்லது ஆபத்தை விளைவித்தாலோ, உடல் ரீதியான துன்புறுத்தல், பாலியல் துன்புறுத்தல், வாய்மொழி மற்றும் உணர்ச்சி ரீதியான துன்புறுத்தல் மற்றும் பொருளாதார மோசடி உள்ளிட்ட செயல்களைச் செய்ய முற்பட்டாலோ, திருநங்கைகள் பாதுகாப்புச் சட்டத்தின் தண்டனை விதிகளை கடுமையாக அமல்படுத்துவதை அரசு உறுதி செய்யும்.

## 3.4. ஆரோக்கியத்திற்கான உரிமை

திருநங்கையர் மற்றும் இடைபாலின நபர்கள் ஹார்மோன் சிகிச்சை. பாலின மறுசீரமைப்பு அறுவை சிகிச்சைகள் போன்ற மருத்துவ சிகிச்சையின் காரணமாக பல்வேறு உடல்நலப் பிரச்சினைகளுக்கு ஆளாக நேரிடும் என்பதால், அவர்களுக்கு தனிப்பட்ட சுகாதார வசதிகள் அவசியமாகிறது.

- மருத்துவம், செவிலியர் படிப்பு மற்றும் பிற சுகாதாரப் படிப்புகளில் திருநங்கையர் மற்றும் இடைபாலினத்தவர்களின் சவால்கள் மற்றும் தேவைகளைப் புரிந்துகொள்ள ஏதுவாக மருத்துவப் பயிற்சியாளர்களுக்கு உதவும் பாடத்திட்டங்களை மேம்படுத்தப்படுவதை அரசு உறுதி செய்யும்.
- தற்போது சுகாதார சேவை வழங்குவதில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு தொடர் மருத்துவக் கல்வி (CME) மூலம் பணியிடைப் பயிற்சி மற்றும் அதனையொத்த திட்டங்கள் ஏற்பாடு செய்யப்படும்.

- தனிநபர்களின் பாலியல் சார்நிலை அல்லது பாலின அடையாளத்தை அவர்களின் விருப்பத்திற்கு எதிராக மாற்றுவதற்குரிய கட்டாய மாற்று சிகிச்சையை அரசு தடை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளும்.
- இதுபோன்ற தீங்கு விளைவிக்கும் நடைமுறைகளில் ஈடுபடும் கட்டாய மாற்று சிகிச்சை சேவைகள் அல்லது நிறுவனங்களின் விளம்பரங்களை அரசு தடை செய்ய முயற்சிகள் மேற்கொள்ளும்.
- திருநங்கைகள் மற்றும் இடை பாலினத்தவர் மீது கட்டாய மாற்று சிகிச்சை முறைகளை மேற்கொள்வதால் ஏற்படும் தீங்கான விளைவுகளைப் பற்றி பெற்றோர், குடும்பங்கள் மற்றும் சமூகத்தினர் / பொதுமக்களை இலக்காக கொண்ட விழிப்புணர்வு பிரச்சாரங்களை அரசு மேற்கொள்ளும்.
- திருநங்கைகள் மற்றும் இடைபாலினத்தவர்கள் தொடர்பான மாநிலத்தின் மனநலக் கொள்கை (2019) செயல்படுத்தப்படுவதை அரசு உறுதி செய்யும்.
- திருநங்கைகள் மற்றும் இடை பாலின சமூகத்தினரிடையே எச்.ஐ.வி தொற்றைத் தடுப்பதற்கு முன்னெச்சரிக்கை தடுப்பு நடவடிக்கைகளை அரசு ஆராய்ந்து வெளியிடும்.
- மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் (கிராமப்புற மற்றும் நகர்ப்புறம்), குறிப்பாக மகப்பேறு மருத்துவர்கள், குழந்தை மருத்துவர்கள், மனநல நிபுணர்கள் மற்றும் உட்சுரப்பியல் நிபுணர்கள் உள்ளிட்ட சுகாதாரத் துறையினருக்கு அவ்வப்போது விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்த அரசு நடவடிக்கை எடுக்கும்.
- திருநங்கையருக்கான சிறப்பு மருத்துவ முகாம்களை ஏற்படுத்த அரசு வழிகாட்டு நெறிமுறைகளை உருவாக்கும்.
- பாலின முரண்பாட்டைக் கண்டறிவதற்கான உடல் பரிசோதனை போன்ற சில நடைமுறைகளை அரசு தடை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளும்.
- தெளிவற்ற பிறப்புறுப்புடன் பிறக்கும் குழந்தைகள் மற்றும் அவர்களுக்கு தேவையான அறுவை சிகிச்சை முறைகள் தொடர்பாக

உருவாக்கப்பட்ட வழிகாட்டுதல்கள் செயல்படுத்தப்படுவதை அரசு உறுதி செய்யும்.

- அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் திருநங்கைகள் மற்றும் இடைப்பாலின நபர்களுக்கு மருத்துவ மேலாண்மையுடன் அறுவை சிகிச்சை முறைகளையும் செயல்படுத்த அரசு வசதி செய்யும்.

## 3.5. கல்விக்கான உரிமை

கல்வி என்பது சமூக முன்னேற்றத்திற்கான அடிப்படை உரிமை மற்றும் திறவுகோலாகும். தனிநபர்கள் மற்றும் சமூகங்களை மேம்படுத்துவதில் இது முக்கிய பங்கு வகிக்கிறது. குடும்பத்தினரால் மறுக்கப்படுதல், களங்கப்படுத்துதல் மற்றும் பாகுபாடு ஆகியவை திருநங்கைகளின் கல்வி வாய்ப்புகளை கணிசமாகக் கட்டுப்படுத்துகின்றன. இதன் விளைவாகப் பள்ளிக் கல்விச் சிக்கல்கள் மற்றும் அதிக இடைநிற்றல் விகிதம் ஏற்படுகின்றன.

- பள்ளிப் படிப்பைத் தொடர முடியாத பாலின–அடையாளம் உறுதிப்படுத்தப்படாத நபர்களைக் கண்டறிந்து, அவர்கள் பள்ளிப் படிப்பை முடிக்க உதவுவதற்காக, மாவட்ட அளவிலான குழுவை அரசு அமைக்கும்.
- மாநிலத்தில் உள்ள அனைத்து கல்வி நிறுவனங்களும் (ஆரம்ப கல்வி முதல் உயர்கல்வி வரை) திருநங்கைகள் மற்றும் இடைபாலின நபர்களுக்கான கொள்கையை ஏற்றுக்கொள்வதுடன், தங்கள் நிறுவனங்களில் உள்ள ஆசிரியர்கள், ஊழியர்கள் மற்றும் மாணவர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும். இது மாற்றுப்பாலின மாணவர்களுக்கு எதிரான வன்முறை, துன்புறுத்தல் மற்றும் பாரபட்சம் போன்ற பிரச்சனைகளுக்கு தீர்வு காண உதவும்.
- ஒவ்வொரு கல்வி நிறுவனமும், மாணவர்களுக்கு தேவைப்படும் நேர்வில் ஆலோசனை வழங்க திருநங்கை மற்றும் இடைபாலின நபர்களை தோழமையுடன் அணுகக்கூடிய வகையில் ஒரு தொடர்பு அலுவலரை நியமிக்கும்.

- அனைத்து கல்வி நிறுவனங்கள்/பல்கலைக்கழகங்களில் உள்ள அனைத்து வகையான தரவு சேகரிப்பு ஆவணங்களிலும் ஆண் மற்றும் பெண்ணுடன் திருநங்கையர் என்னும் தேர்வு வாய்ப்பையும் அரசு அளிக்கும்.
- உயர்கல்வியைத் தொடரும் திருநங்கைகள் மற்றும் இடைபாலின மாணவர்களுக்கு அரசு உதவித் தொகை வழங்கும்.
- பள்ளி மற்றும் உயர்கல்வி நிறுவனங்களில் இருந்து இடைநிற்கும் பாலின அடையாளம் உறுதிப்படுத்தப்படாத நபர்களுக்கு அரசு வயது தளர்வு அளிக்கும்.
- திருநங்கைகள் பாதுகாப்புச் சட்டம், 2019 (மத்திய சட்டம் 40, 2019)இல் அறிவிக்கப்பட்டுள்ளபடி, அனைத்து கல்வி நிறுவனங்களும் திருநங்கைகள் மற்றும் இடைபாலின நபர்களுக்கான கல்விச் சான்றிதழ்களில் பெயர் மற்றும் பாலினத்தை மாற்றுவதற்கான நடவடிக்கையை அரசு உறுதி செய்யும்.

## 3.6. வேலை வாய்ப்பிற்கான உரிமை

ஒவ்வொரு தனிநபரும், பாலின வேறுபாடின்றி, தனது வாழ்வாதாரத்தைப் பெறுவதற்கான வேலை வாய்ப்புக்கு தகுதியானவர்கள். இருப்பினும், திருநங்கைகள் பாலின மாற்றத்திற்குப் பிறகு வேலை வாய்ப்புகளைத் தேடுவதில் சிரமப்படுகின்றனர் மற்றும் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் பாலின மாறுதல் செயல்முறையைப் பற்றி வெளிப்படையாக தெரிவிப்பது, அவர்களின் வேலைகளை இழக்கும் அச்சுறுத்தல்களை ஏற்படுத்துகிறது.

திருநங்கைகள் மற்றும் இடைபாலின நபர்களுக்கு வேலைவாய்ப்பில் சமமான அணுகுமுறை இருப்பதை உறுதிசெய்ய, அரசு பின்வருவனவற்றை உறுதி செய்யும்:

- சுயதொழில் துவங்க உதவித் திட்டங்களை வழங்குதல் மற்றும் தகுதியுடைய திருநங்கைகள் மற்றும் இடைபாலின நபர்களுக்கு மானியம் வழங்குதல்.

- பொது மற்றும் தனியார் துறையில் உள்ள அலுவலகங்கள், திருநங்கைகள் மற்றும் இடைபாலினத்தவர் குறித்து ஊழியர்களுக்குத் தகுந்த விழிப்புணர்வு அளித்தல்.
- சிறுபான்மை பாலின சமூகத்தைச் சார்ந்த ஒரு நபருக்கு உரிய தகுதி இருக்கும்பட்சத்தில், பாலின அடையாளம் /செயல்பாடுகள் மற்றும் பாலின குணாதிசயங்களை மட்டுமே காரணமாக காட்டி வேலைவாய்ப்பு மறுக்கப்படக்கூடாது.
- அனைத்து பொது அல்லது தனியார் நிறுவனங்களால் பணியமர்த்துதல் மற்றும் பணியாளர் நலன் திட்டங்களை வழங்குவதற்கான செயல்முறைகளில் பாலின பாகுபாடு–எதிர்ப்பு கொள்கைகளை அமல்படுத்துதல்.
- அனைத்து பணியிடங்களிலும் (தனியார் மற்றும் பொது) ஒரு நபரின் பாலின அடையாளத்தின் காரணமாக தொழில் வளர்ச்சி/ பதவி உயர்வு/ பதவி தொடர்ச்சி பாதிக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.
- திருநங்கைகள் நல வாரியத்துடன் ஒருங்கிணைந்து திருநங்கைகள் மற்றும் இடைபாலினருக்கு தேவையான சமூக மேம்பாட்டு நடவடிக்கைகளுக்கு பெருநிறுவன சமுதாயப் பொறுப்பு நிதி (CSR) ஆதரவை வழங்க தனியார் துறை நிறுவனங்கள் ஊக்குவிக்கப்படுவார்கள்.
- திருநங்கைகள் நல வாரியம், சிறப்பு வேலை வாய்ப்பு முகாம்கள், திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள், பணியிடங்களில் சுயவேலைவாய்ப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் போன்றவற்றை நடத்துவதற்கு பெரு நிறுவன சமுதாயப் பொறுப்பு (CSR) நிதியைப் பயன்படுத்தும்.
- அனைத்து கல்வி நிறுவனங்கள் மற்றும் தொழிற்துறை நிறுவனங்கள் (தனியார் மற்றும் பொது) திருநங்கைகள் மற்றும் இடைபாலின நபர்கள் அனைத்து செயல்பாடுகளிலும் பங்கேற்பதை உறுதி செய்வதைக் கண்காணிக்க ஒரு தொடர்பு / குறைதீர் அலுவலரை நியமிக்க வேண்டும்.

### 3.7. வேலைவாய்ப்பு மற்றும் கல்வி நிறுவனங்களில் பிரதிநிதித்துவத்திற்கான உரிமை

திருநங்கைகள் மற்றும் இடைபாலின நபர்கள் எதிர்கொள்ளும் பாகுபாடு மற்றும் வன்முறை அவர்களின் இயக்கம், பொது இடங்களில் புழங்குதல், கல்வி, வேலை மற்றும் சுகாதாரம் ஆகியவற்றை வெகுவாகப் பாதிக்கிறது. அவர்களுக்கு உரிமையமளிப்பது என்பது வழக்கமான தடைகளை நிவர்த்தி செய்தல் மற்றும் கல்வி மற்றும் வேலை வாய்ப்புகளை வழங்குவதை உள்ளடக்கியதாகும். இது அவர்களை மேம்படுத்துவதோடு, தேசத்தைக் கட்டியெழுப்புவதில் அவர்களின் பங்கேற்பையும் உறுதி செய்யும்.

- திருநங்கைகள் 'சமூக ரீதியாகவும் கல்வி ரீதியாகவும் மிகவும் பின்தங்கியவர்களாக கருதப்படுவார்கள்'.
- கல்வி நிறுவனங்கள் மற்றும் அரசு வேலைவாய்ப்பு வாய்ப்புகளில், திருநங்கை மற்றும் இடைப் பாலின நபர்களின் பொருத்தமான பிரதிநிதித்துவத்தை உறுதி செய்ய தேவையான நடவடிக்கைகளை அரசு எடுக்கும்.

### 3.8. குடியிருப்பு மற்றும் தங்குவதற்கான உரிமை

திருநங்கைகள் (உரிமைகள் பாதுகாப்பு) சட்டம், 2019 (மத்திய சட்டம் 40, 2019)-ன்படி, "திருநங்கை என்ற காரணத்திற்காக எந்தக் குழந்தையும் பெற்றோரிடமிருந்தோ அல்லது நெருங்கிய குடும்பத்திலிருந்தோ பிரிக்கப்படக்கூடாது. ஒவ்வொரு திருநங்கைக்கும் பெற்றோர் அல்லது சொந்த குடும்ப உறுப்பினர்கள் இருக்கும் வீட்டில் வசிக்க உரிமை உண்டு. அத்தகைய வீடு அல்லது அதன் எந்தப் பகுதியிலிருந்தும் விலக்கப்படாமல் இருக்கவும், அத்தகைய குடும்பத்தின் வசதிகளை பாரபட்சமற்ற முறையில் அனுபவிக்கவும் பயன்படுத்தவும் அவர்களுக்கு உரிமை உள்ளது.

- நியாய விலையில் வீடுகள் மற்றும் இலவச வீட்டு மனை பட்டாக்கள் வழங்கும் திட்டத்தின் கீழ் திருநங்கைகள் மற்றும் இடைபாலின நபர்களுக்கு அரசு முன்னுரிமை வழங்கும்.
- திருநங்கைகள் மற்றும் இடைபாலின நபர்களுக்கு குறுகிய கால தங்குமிடங்களை ஏற்படுத்த அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ளும்.
- திருநங்கைகள் மற்றும் இடைபாலின நபர்களுக்கு வீடுகள் வாடகைக்கு எடுத்து தங்குவதற்கான நடைமுறைகளை அரசு எளிதாக்கும்.
- குடும்ப வன்முறையை எதிர்கொள்ளும் திருநங்கைகள் மற்றும் இடைபாலின நபர்களின் பிரச்சினைகள் குறித்து தற்போதுள்ள ஒருங்கிணைந்த சேவை மையங்களுக்கு உரிய பயிற்சி அளிக்கப்படும்.
- சிறார் நீதிச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டுள்ள குழந்தைகள் இல்லங்களில் பாலினம் உறுதி செய்யப்படாத குழந்தைகள் மற்றும் திருநங்கைகள் வன்முறைக்கு உள்ளாகும் வாய்ப்புகளை உணர்ந்து, அதற்கேற்றவாறு அவர்கள் தங்க வைக்கப்படுவதை அரசு உறுதிப்படுத்தும்.
- குறுகிய கால தங்கும் மையங்கள், வீடற்றோருக்கான தங்குமிடங்கள், விடுதிகள், ஆதரவற்றோர் இல்லங்கள், தத்தெடுப்பு மற்றும் வளர்ப்பு சேவைகளின் ஆலோசகர்கள் உட்பட நிறுவன ஊழியர்கள் பாலினம் உறுதி செய்யப்படாத குழந்தைகள்/நபர்களின் தேவைகள் மற்றும் கவலைகளை உணர்ந்து செயல்படுவதை அரசு உறுதி செய்யும்.

### 3.9. தீர்வுக்கான உரிமை

திருநங்கையருக்கு சமத்துவம் என்பதில் திருமணம் செய்து கொள்ளும் உரிமை, குடும்பம் நடத்தும் உரிமை, வாரிசு சொத்தினைப் பெறுதல் மற்றும் பாகுபாடு இன்றி நடத்தப்படுவதற்கான உரிமை ஆகியவை அடங்கும். குடும்பம் மற்றும் நெருங்கிய உறவினரால் குடும்ப

வன்முறையை எதிர்கொள்ளும் திருநங்கைகளைப் பாதுகாக்கும் உரிமையும் இதில் அடங்கும்.

- திருநங்கை மற்றும் இடைப் பாலின நபர்களுக்கு வாரிசுரிமையை உறுதி செய்ய, இந்து வாரிசுரிமைச் சட்டம், இந்திய வாரிசுரிமைச் சட்டம் போன்றவற்றைத் திருத்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளும்.
- பாகுபாடு மற்றும் வன்முறைக்கு எதிராக பரிகாரம் தேடும் திருநங்கைகள் மற்றும் இடைபாலின நபர்களுக்கு இலவச சட்ட ஆலோசனை/உதவி வழங்க தேவையான ஏற்பாடுகளை அரசு செய்யும்.
- அனைத்து பாலியல் மற்றும் பாலினம் தொடர்பான கேள்விகளுக்கும் முறையான உதவி அளிக்க ஏதுவாக கட்டணமில்லா உதவி எண்ணை (24x7) அரசு செயல்படுத்தும்.
- பாலினம் உறுதி செய்யப்படாத குழந்தைகளைக் கொண்ட பெற்றோருக்கு முறையான ஆலோசனைகள் வழங்கப்பட்டு, அத்தகைய குழந்தைகள் எந்தவிதமான அச்சுறுத்தலும் இல்லாமல் குடும்பத்துடன் வாழ்வதை உறுதிசெய்யும்.
- மருத்துவம் அல்லது மதம் சார்ந்த முயற்சிகள் மூலம் தங்கள் குழந்தைகளின் பாலின உணர்வு அல்லது சுய உணர்வு மூலமான பாலின அடையாளத்தை மாற்றுவதற்கோ திருமணத்திற்கு வற்புறுத்த முயற்சிக்கவோ கூடாது என்று பெற்றோருக்கு அரசு விழிப்புணர்வை ஏற்படுத்தும்.
- குடும்ப உறுப்பினர்கள், நெருங்கிய உறவுகள் மற்றும் பிறரால் மேற்கொள்ளப்படும் பாலின அடிப்படையிலான வன்முறைக்கு எதிரான சட்டங்கள் தீவிரமாக செயல்படுத்தப்படுவதை உறுதி செய்ய அரசு நடவடிக்கை எடுக்கும்.
- சிறார் நீதி (குழந்தைகளின் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015 (மத்திய சட்டம் 2, 2016) மற்றும் பிற தொடர்புடைய சட்டங்களை, பாலினம் உறுதிப்படுத்தப்படாத நபர்களின் தேவைகளை நிவர்த்தி

செய்யும் வகையில் மாற்றியமைக்க/திருத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும்.

### 3.10. பிற உரிமைகள்

திருநங்கை மற்றும் இடைப்பாலின நபர்கள் பின்வரும் உரிமைகளை அணுகுவதற்கு, அரசு நடவடிக்கை எடுக்கும் :

- ❖ பொதுவெளியில் சுகாதார தேவைக்கான வசதிகளை ஏற்படுத்துதல்,
- ❖ பாகுபாடற்ற வங்கி சேவைகளை வழங்குதல்,
- ❖ பொது அலுவலகங்களில் பதவி வகிக்கும் உரிமை வழங்குதல்,
- ❖ திருமணமாகாத மற்றும் பிரிந்து வாழும் பெண்களுக்கு குடும்ப அட்டை வழங்கப்படுவதைப் போன்ற செயல்முறையைப் பின்பற்றி, பொது விநியோக முறையின் கீழ் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளவர்களுக்கு குடும்ப அட்டை வழங்குதல் ஆகியவற்றை நிறைவேற்றுதல்.
- ❖ திருநங்கைகள் மற்றும் இடைபாலின சமூகத்தினர் தொடர்பான பொருத்தமான சொற்களைப் பயன்படுத்துவது குறித்து ஊடகங்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்கும்.

# அத்தியாயம் IV

## செயலாக்கம் மற்றும் கண்காணிப்பு

### 4.1. செயலாக்கம்

திருநங்கைகள் நல வாரியமானது பல்வேறு நலத்திட்டங்கள் மற்றும் திருநங்கைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் திட்டங்கள் மூலம் தமிழ்நாடு மாநில திருநங்கையர் கொள்கையை செயல்படுத்த மாநில அளவிலான ஆலோசனை அமைப்பாக செயல்படும். மேலும் பல்வேறு துறைகளின் மூலம் கொள்கையின் அமலாக்கத்தைக் கண்காணிக்கும் உச்ச அமைப்பாகவும் செயல்படும்.

இக்கொள்கையின்படி, திருநங்கை மற்றும் இடைபாலின சமூகத்தைச் சேர்ந்த உறுப்பினர்களை உள்ளடக்கிய மாவட்ட அளவிலான குழுக்கள் உருவாக்கப்பட வேண்டும். மாவட்ட ஆட்சியர்கள் தலைமையிலான இந்தக் குழுக்கள், எதிர்பார்க்கப்படும் விளைவுகளை அடையும் வகையில், கொள்கை செயல்படுத்தப்படுவதைக் கண்காணிக்கும்.

எதிர்பார்க்கப்படும் பலன்களை அடைவதற்காக பல்வேறு தொடர்புடைய துறைகளுடன் ஒருங்கிணைந்து இக்கொள்கை செயல்படுத்தப்படும். சமூக நலத்துறையானது, பிற துறைகளின் செயல்முறைத் திட்டங்களை வடிவமைக்க உதவும்.

### 4.2. கண்காணிப்பு

தலைமைச் செயலர் தலைமையிலான அனைத்து துறைகளையும் உள்ளடக்கிய உயர்மட்டக் குழு, ஆறு மாதங்களுக்கு ஒருமுறை கூடி, கொள்கையை செயல்படுத்துவது குறித்து ஆய்வு செய்து, இடைக்காலத் திருத்தங்களை பரிந்துரைக்கும்.

மாநில அளவிலான குழு

1. தலைமைச் செயலாளர்– தலைவர், பதவி வழி உறுப்பினர்

2. அரசு செயலாளர்/முதன்மைச் செயலாளர்/கூடுதல் தலைமைச் செயலாளர், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை– பதவி வழி உறுப்பினர்

3. சுகாதாரம், உள்துறை, சட்டம், நிதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற மேம்பாடு, மனிதவள மேம்பாடு, ஆதி–திராவிட மற்றும் பழங்குடியினர் நலன், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலன், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு, பள்ளிக் கல்வி மற்றும் உயர் கல்வித் துறையின் செயலாளர்கள் /முதன்மைச் செயலாளர்/கூடுதல் தலைமைச் செயலாளர் – பதவி வழி உறுப்பினர்கள்

4. திருநங்கைகள், இடைபாலின சமூகப் பிரதிநிதிகள் – அலுவல்சாரா உறுப்பினர்கள்

5. திருநங்கைகள் மற்றும் இடைபாலின நபர்களின் நலனுக்காக பாடுபடும் பொது நல அமைப்புகளின் பிரதிநிதிகள் – உறுப்பினர்கள்

6. மாநில சட்ட சேவைகள் ஆணையத்தின் பிரதிநிதி– உறுப்பினர்

7. சமூக நல ஆணையர் – உறுப்பினர் செயலாளர்

மாநில அளவிலான குழு பின்வரும் பணிகளை மேற்கொள்ளும்:

1. திருநங்கைகள் மற்றும் இடைபாலின நபர்களின் நலனுக்கான திட்டங்கள், சட்டங்கள் மற்றும் செயல் திட்டங்களை உருவாக்குவது குறித்து அரசுக்கு ஆலோசனை வழங்குதல்.

2. திருநங்கைகள் மற்றும் இடைபாலின நபர்களின் கொள்கைகள் மற்றும் செயல் திட்டங்களின் தாக்கத்தை கண்காணித்து மதிப்பீடு செய்தல்.

3. திருநங்கைகள் மற்றும் இடைபாலினத்தவரின் சமத்துவம் மற்றும் முழுமையான பங்களிப்பினை உறுதி செய்யும் வகையில் அனைத்து

துறைகள் மற்றும் அரசு சாரா அமைப்புகளின் செயல்பாடுகளை மதிப்பாய்வு செய்து ஒருங்கிணைத்தல்.

4. கொள்கையின் செயல்திறனை அவ்வப்போது மறுஆய்வு செய்து, தேவைப்படும் இடங்களிலும், தேவைப்படும் நேரத்திலும் தேவையான திருத்தங்களை பரிந்துரைத்தல்.

5. அரசாங்கத்தால் பரிந்துரைக்கப்படும் மற்ற செயல்பாடுகளைச் செய்தல்.

இதேபோல், மாவட்ட ஆட்சியர் தலைமையிலான மாவட்ட அளவிலான கண்காணிப்புக் குழு, மூன்று மாதங்களுக்கு ஒருமுறை கூடி இந்தக் கொள்கையை செயல்படுத்துவது குறித்து ஆய்வு செய்யும்.

மாவட்ட அளவிலான குழு பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருக்கும்:

1. மாவட்ட ஆட்சியர்– தலைவர்
2. மாவட்ட சமூக நல அலுவலர் – உறுப்பினர் செயலாளர்
3. காவல் கண்காணிப்பாளர்– உறுப்பினர்
4. இணை இயக்குநர்/ துணை இயக்குநர் (சுகாதார சேவைகள்) உறுப்பினர்
5. மருத்துவ உளவியலாளர் /மனநல மருத்துவர்– உறுப்பினர்
6. தொழிலாளர், வேலைவாய்ப்பு, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலன், முதன்மைக் கல்வி அலுவலர், மாவட்டக் கல்வி அலுவலர், தொடக்கக் கல்வி அலுவலர், மாவட்ட தொழில் மையம், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத் துறை அலுவலர்கள் – உறுப்பினர்கள்.
7. திருநங்கைகள் மற்றும் இடைபாலின சமூகத்தின் பிரதிநிதி – உறுப்பினர்

8. அரசு சாரா அமைப்பு பிரதிநிதி– உறுப்பினர்

மாவட்ட அளவிலான குழுவின் செயல்பாடு மற்றும் பொறுப்பு

1. மாவட்ட அளவில் கொள்கையை செயல்படுத்துதல்.
2. திருநங்கைகள் மற்றும் இடைபாலின நபர்களின் சமூக, பொருளாதார மற்றும் அரசியல் வளர்ச்சிக்கான திட்டங்களை செயல்படுத்துதல் மற்றும் கண்காணித்தல்.
3. அடையாள அட்டைகள் வழங்குதல், சுயதொழில் மானியம், திறன் பயிற்சி போன்றவற்றிற்கான வழக்கமான முகாம்களை நடத்தி கண்காணித்தல்.
4. தங்குமிடங்கள், குறுகிய கால தங்குமிடங்கள் மற்றும் ஆதரவு மையங்களை அமைத்தல்.
5. திருநங்கைகள் மற்றும் இடைபாலின நபர்கள் பற்றி பொதுமக்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள், காவல்துறை. சுகாதார வல்லுநர்கள், பொது ஊழியர்கள், துறை அதிகாரிகள், சிவில் சமூக அமைப்புகள் ஆகியோரிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.
6. திருநங்கைகள் மற்றும் இடைபாலின நபர்களின் குறைகளை நிவர்த்தி செய்வதற்காக குறிப்பிட்ட கால இடைவெளியி குறைதீர் நாட்களை / தினத்தை நடத்துதல்.

## 4.3. செல்லுபடியாகும் காலம்

இந்தக் கொள்கை அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து 5 ஆண்டுகளுக்கு அல்லது புதிய கொள்கை உருவாக்கப்படும் வரை செல்லுபடியாகும். ஏற்கனவே கொள்கையின் கீழ் உள்ள பயனாளிகளை பாதிக்காமல், தேவைக்கேற்ப திருத்தங்கள் செய்யப்படலாம்.

## 4.4. முடிவுரை

தமிழ்நாடு மாநிலம் திருநங்கையர்களைச் சமூகத்தில் பாதிக்கப்படக்கூடிய மற்றும் ஒதுக்கப்பட்ட பிரிவாக அங்கீகரித்து, அவர்களின் தேவைகள் மற்றும் கோரிக்கைகளை மையமாக வைத்து நிறைவேற்றத் தனி நல வாரியத்தை அமைத்து நாட்டிலேயே முன்னணியில் உள்ளது. சென்னையில் மாநில அளவிலும், விழுப்புரம், திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் மற்றும் மதுரை ஆகிய நான்கு மண்டல அளவிலும் திருநங்கைகள் அதிக அளவில் பங்கேற்று நடத்தப்பட்ட பரவலான ஆலோசனைகளின் அடிப்படையில் தற்போதைய கொள்கை உருவாக்கப்பட்டுள்ளது. மாநிலத்திலுள்ள திருநங்கையர் மற்றும் இடை பாலின நபர்களுக்கான கருத்துகள் பதிவு செய்யப்பட்டு, தேவைகளை உட்படுத்தி கொள்கையை உருவாக்குவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. தற்போது செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் மற்றும் திட்டங்களுக்கான அணுகுமுறைகளில் அடிப்படை மாற்றத்தை கொண்டு வருவதன் மூலம் அரசியலமைப்பின்படி திருநங்கைகளுக்கான உரிமைகளை மேம்படுத்த தமிழ்நாடு அரசு உறுதிபூண்டுள்ளது.

# V. இணைப்பு

திருநங்கையர் மற்றும் இடைபாலின நபர்களுக்கு, உயர் இரத்த அழுத்தம், நீரிழிவு, இதய நோய்கள் மற்றும் உடல் பருமன் போன்ற தொற்றா நோய்களுக்கு குறிப்பிட்ட கால இடைவெளியில் பரிசோதனை செய்வதை அரசு உறுதி செய்யும்.

## 5.1. திருநங்கையர் நலத்திற்காகச் செயல்படுத்தப்பட்ட நலத் திட்டங்களைப் பற்றிய முக்கியமான தரவுகள் :

| | |
|---|---|
| அடையாள அட்டை வழங்கப்பட்ட எண்ணிக்கை (28.07.2025 வரை) | 10,637 |
| கல்வி உதவித் தொகை பெற்றோர் எண்ணிக்கை | 24 |
| குடும்ப அட்டைகள் வழங்கப்பட்ட எண்ணிக்கை | 6,231 |
| வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டது – மே 2021 முதல் | 1,877 |
| தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் மூலம் வழங்கப்பட்ட வீடுகள் எண்ணிக்கை | 722 |
| "கலைஞர் கனவு இல்லத் திட்டம்" மூலம் வழங்கப்பட்ட வீடுகள் எண்ணிக்கை | 466 |
| சுகாதார காப்பீட்டு அட்டைகள் வழங்கப்பட்ட எண்ணிக்கை | 5,123 |
| சுய உதவிக்குழுக்கள் (மொத்தம் / உறுப்பினர்கள்) | 60 குழுக்கள் / 403 உறுப்பினர்கள் |

| | |
|---|---|
| சுயதொழில் மானியத் தொகை பெற்றவர்கள் (மே 2021 முதல் ) | 811 |
| COVID-19 நிவாரணத் தொகை பெற்றோர் | 8,493 |
| கட்டணமில்லா பேருந்து பயணங்கள் (31.05.2025 நிலவரப்படி; பயணங்கள் எண்ணிக்கை) | 38.74 இலட்சம் |
| 2025-ஆம் ஆண்டில் ஓய்வூதியம் பெறுவோர் எண்ணிக்கை | 1,760 |

## 5.2. திருநங்கையர் மற்றும் இடைப்பாலின நபர்கள் தொடர்பான சொல்விளக்கத் திரட்டு ஆங்கிலம் மற்றும் தமிழ் ஊடகங்களுக்கான சொற்கூறுகள்

| வ.எண். | சொல் (ஆங்கிலம்) | சொல் (தமிழ்) | விளக்கம் (ஆங்கிலம்) | விளக்கம் (தமிழ்) |
|---|---|---|---|---|
| 1. | Sex | பால்,<br>பால் பகுப்பு / பால் பிரிவு | Sex refers to the biological make-up of a person, based on external or internal body parts, hormones, sex chromosomes, etc. | பால், பால் பகுப்பு / பால் பிரிவு என்பது ஒரு நபரின் வெளிப்புற மற்றும் உட்புற உடல் உறுப்புகள், ஹார்மோன்கள், பால் குரோமோசோம்கள் போன்றவற்றின் அடிப்படையிலான உயிரியல் பண்பமைப்பைக் குறிக்கும். |
| 2. | Sex characteristics | பால் பண்பு<br>பாலின பண்புகள் | "Sex characteristics" refer to an individual's physical sexual/reproductive features that are formed on the basis of their sex. This includes genitalia (vagina/uterus or penis/testicles etc), sex chromosomes (XX, XY, XXY, XYY, XO, etc), dominant sex hormones present in their body (estrogen, progesterone, testosterone etc), secondary sexual features (breasts, facial hair, deep voice etc), among others. Sex characteristics may influence a person's gender identity, expressions, | ஒரு நபரின் பால் அடிப்படையிலான உடல், பால் அம்சங்கள் மற்றும் இனப்பெருக்க அம்சங்கள் பால் பண்புகள் / பாலின பண்புகள் எனப்படும். பால் உறுப்புகள், பால் குரோமோசோம்கள், உடலில் ஆதிக்கம் செலுத்தும் பால் ஹார்மோன்கள், இரண்டாம் நிலைப் பால் பண்புகள் போன்றவை இதில் அடங்கும். ஒரு நபரின் பாலின பண்புகள், பாலின வெளிப்பாடு, பாலீர்ப்பு ஆகியவற்றில் தாக்கத்தினை ஏற்படுத்தக் கூடும். ஆனால் இவை மட்டும் முழுக்காரணமாக இருக்க வேண்டிய அவசியம் இல்லை. |

| வ.எண். | சொல் (ஆங்கிலம்) | சொல் (தமிழ்) | விளக்கம் (ஆங்கிலம்) | விளக்கம் (தமிழ்) |
|---|---|---|---|---|
| | | | sexual orientation or sexuality, but are not the cause of it. | பால் உறுப்புகள்: பெண்ணுறுப்பு, கருப்பை, ஆணுறுப்பு, விந்தகம் போன்றவை.<br>பால் குரோமோசோம்கள்: XX, XY, XXY, XYY, XO போன்றவை<br>உடலில் ஆதிக்கம் செலுத்தும் பால் ஹார்மோன்கள்: ஈஸ்ட்ரோஜன், ப்ரோஜெஸ்டிரோன், டெஸ்டாஸ்டிரோன் போன்றவை.<br>இரண்டாம் நிலைப் பால் பண்புகள்: முகத்தில் வளரும் முடி, குரல், மார்பகங்கள் போன்றவை |
| 3. | Inter sex | ஊடுபால், இன்டர்செக்ஸ், இடைப்பால் | Intersex people have innate sex characteristics that do not fit medical and social norms for female or male bodies. These can include external or internal reproductive parts, chromosome patterns, and/or hormonal patterns. Being intersex can create risks or experiences of stigma, discrimination and harm.<br>Note: It's wrong to assume that all intersex persons are | இன்டர்செக்ஸ்/ ஊடுபால்/ இடைப் பால் என்பது ஆண்-பெண் என்ற ஈர்மறைக்கு (இருநிலைக்கு) அப்பாற்பட்ட உடல்களைக் கொண்ட நபர்களைக் குறிப்பதற்கான பொதுப்பெயர்.<br>ஊடுபால் / இன்டர்செக்ஸ் / இடைப்பால் நபர்களின் பிறவிப் பால் பண்புகளானது மருத்துவ மற்றும் சமூக ரீதியிலான ஆண் மற்றும் பெண் எனும் வரையறைக்குள் ஒத்துப் போகாது. இதனால் இன்டர்செக்ஸ்/ ஊடுபால்/ இடைப்பால் நபர்கள் |

| வ.எண். | சொல் (ஆங்கிலம்) | சொல் (தமிழ்) | விளக்கம் (ஆங்கிலம்) | விளக்கம் (தமிழ்) |
|---|---|---|---|---|
| | | | transgender. Intersex persons also have diverse intersections of gender identity, gender expression and sexuality. Like any individual, intersex persons are the only ones who can determine their gender identity, sexuality, and sexual orientation.<br><br>Note: Several intersex children are forced into surgical procedures by doctors and parents/guardians, to make their bodies 'conform' to a binary sex. This is unethical and should be called out in stories. These enforced surgeries can also result in trauma, health conditions and more later | இழிவிற்கும் ஒதுக்குதலுக்கும் ஆளாக்கப்படுகின்றனர்.<br><br>குறிப்பு: அனைத்து இன்டர்செக்ஸ்/ ஊடுபால் / இடைப்பால் நபர்களும் மருவிய/ மாற்றுப் பாலினத்தவர் என்று அனுமானிப்பது தவறு.<br><br>எல்லோரையும் போலவே பல்வேறு பாலீர்ப்புகளும், பாலின அடையாளங்களும் அவற்றை தீர்மானிக்கும் உரிமையும் இன்டர்செக்ஸ் / ஊடுபால் / இடைப்பால் நபர்களுக்கும் உண்டு.<br><br>குறிப்பு: மருத்துவ மற்றும் சமூக ரீதியிலான ஆண் அல்லது பெண் எனும் வரையறைக்குள் உடலை மாற்றுவதற்காக மருத்துவர்கள் மற்றும் பெற்றோர்/ காப்பாளர்கள் மூலம் இன்டர்செக்ஸ்/ ஊடுபால்/ இடைப்பால் குழந்தைகளுக்கு கட்டாய அறுவை சிகிச்சை நடத்தப்படுகிறது. இது தார்மீக முறைப்படி தவறானது. இந்த அறுவை சிகிச்சைகள் மன மற்றும் உடல் ரீதியில் கடுமையான பின்விளைவுகளை |

| வ.எண். | சொல் (ஆங்கிலம்) | சொல் (தமிழ்) | விளக்கம் (ஆங்கிலம்) | விளக்கம் (தமிழ்) |
|---|---|---|---|---|
| | | | | ஏற்படுத்தக்கூடும். இதைக் கண்டிக்கவும் இதற்கு எதிராக குரல் எழுப்பவும் வேண்டும். |
| 4. | Gender | பாலினம் | 'Gender' is how society perceives persons, based on the norms, behaviours and roles associated with the sex assigned at birth. For instance, a person assigned male is expected to grow up to be a 'man' and be powerful and assertive; a person assigned female is expected to grow up to be a 'woman' and to be sweet and nurturing. It is a social construct, and what each gender is 'expected' to do changes from society to society, and over time. | பிறப்பின்போது வழங்கப்படுகிற பாலினத்தை சார்ந்த வழமைகள், நடத்தைகள், பால் பங்களிப்பு ஆகியவற்றை வைத்து ஒரு நபரை சமூகம் பார்க்கும் விதமே " பாலினம்" எனப்படும். உதாரணமாக, பிறப்பில் " ஆண்" என்று வகைப்படுத்தப்படும் ஒருவர், ஆணாக வளர்ந்து, வலிமையானவராகவும் உறுதியுடனும் இருக்க வேண்டும் என்றும், பிறப்பில் "பெண்" என்று வகைப்படுத்தப்படும் ஒருவர், இனிமையாகவும் பிறரைப் பேணுபவராகவும் இருக்க வேண்டும் என்றும் எதிர்பார்ப்புகள் உள்ளன. இது ஒரு சமூகக் கட்டமைப்பு. இந்த எதிர்பார்ப்புகள் சமூகத்தைப் பொறுத்தும் காலத்தைப் பொறுத்தும் மாறுபடும். |

| வ.எண். | சொல் (ஆங்கிலம்) | சொல் (தமிழ்) | விளக்கம் (ஆங்கிலம்) | விளக்கம் (தமிழ்) |
|---|---|---|---|---|
| 5. | Gender Identity | பாலின அடையாளம் | 'Gender Identity' refers to how an individual defines their own gender. It depends on a person's deeply felt internal experience of gender. It need not correspond to the sex assigned to the person at birth, and the expectations that society has from this assigned sex or associated gender. 'Gender Identity' is self-determined - that is, only an individual can declare what their gender identity is. There is no 'medical test' for gender identity. For instance, a transgender man, or transgender woman, or a non-binary person, are the only ones who can say what their gender is. | ஒரு நபர் தன் பாலினத்தை எப்படி வரையறுக்கிறார் என்பதே பாலின அடையாளம் எனப்படும். அந்த நபரின் ஆழமான பாலினம் சார்ந்த அனுபவங்களின் அடிப்படையில் அவரது பாலின அடையாளம் இருக்கும்.<br>பாலின அடையாளம் என்பது பிறப்பின்போது வழங்கப்படும் பாலினம் சார்ந்த வழமைகள் மற்றும் சமூகம் வைத்திருக்கும் எதிர்பார்பை சார்ந்து இருக்க வேண்டிய அவசியம் இல்லை.<br>பாலின அடையாளம் என்பது அந்தந்த நபரின் தீர்மானம். அவர் மட்டுமே அதை முடிவு செய்ய முடியும். பாலின அடையாளத்திற்கான மருத்துவப் பரிசோதனைகள் இல்லை. மருவிய/ மாற்றுப் பாலினத்தவர்களோ, பாலின இருநிலைக்கு அப்பாற்பட்டவர்களோ அவர்கள் எந்தப் பாலின அடையாளத்துடன் தன்னைப் பொருத்திக் கொள்கிறார்கள் என்பதை அவர்கள் தான் கூறவேண்டும். |

| வ.எண். | சொல் (ஆங்கிலம்) | சொல் (தமிழ்) | விளக்கம் (ஆங்கிலம்) | விளக்கம் (தமிழ்) |
|---|---|---|---|---|
| 6. | Gender expression | பாலின வெளிப்பாடு | Gender expression is how a person publicly expresses or presents their gender. This can include behaviour and outward appearance such as dress, hair, make-up, body language and voice. A person's chosen name and pronouns are also common ways of expressing gender.<br>Gender expression does not automatically correspond to one's gender identity. For instance, a woman may dress in pants and shirts and have short hair – generally related by society to a 'man's' gender expression.<br>Another example: a person assigned male at birth who wears a saree isn't automatically a transgender woman. They may still identify as a man, or as non-binary, or any other gender identity. | தன்னுடைய பாலினத்தை ஒரு நபர் எப்படி பொதுவில் வெளிப்படுத்திக் கொள்கிறார் என்பது பாலின வெளிப்பாடாகும். இது நடத்தை மற்றும் வெளித் தோற்றங்களான உடை, தலைமுடி, அலங்காரம், உடல்மொழி, குரல் போன்ற பல அம்சங்களை உள்ளடக்கியது.<br>ஒருவர் தேர்ந்தெடுத்துக்கொள்ளும் பெயர் அல்லது பெயர் விகுதிகளும் பாலின வெளிப்பாட்டின் வகைமைகளே. பாலின வெளிப்பாடு என்பது பாலின அடையாளத்தை அப்படியே சுட்டுவதாக இருக்க வேண்டும் என்பதில்லை. உதாரணமாக, ஆண்களின் பாலின வெளிப்பாடாகக் கருதப்படும் பேண்ட், சட்டைகளை ஒரு பெண் அணியலாம். அவர் குட்டையாக முடி வெட்டியிருக்கலாம். அல்லது பிறப்பில் ஆணாக வகைப்படுத்தப்பட்ட ஒருவர் புடவை அணிவதாலேயே அவர் திருநங்கை ஆகிவிடமாட்டார். |

| வ.எண். | சொல் (ஆங்கிலம்) | சொல் (தமிழ்) | விளக்கம் (ஆங்கிலம்) | விளக்கம் (தமிழ்) |
|---|---|---|---|---|
| | | | | அவர் தன்னை ஒரு ஆணாகவோ, பால் இருநிலைக்கு அப்பாற்பட்டவராகவோ, வேறு பாலினத்துடனோ அடையாளப்படுத்திக் கொள்ளலாம். |
| 7. | Gender non-conforming person | பாலின அடையாளங்களுடன் ஒத்துப்போகாதவர் பாலின வெளிப்பாடு அல்லது அடையாளங்களுடன் ஒத்துப்போகாதவர் | People (adults or children) who do not conform to either of the binary gender definitions of male or female, as well as those whose gender expression may differ from standard gender norms. In some instances, individuals are perceived as gender non-conforming by other people because of their gender expression. However, these individuals may not perceive themselves as gender non-conforming. Gender expression and gender non-conformity are clearly related to individual and social perceptions of masculinity and femininity. | ஆண் அல்லது பெண் என்ற இரு பாலின வரையறைக்குள் தன்னைப் பொருத்திக் கொள்ளாதவர்கள் மற்றும், பொதுவான பாலின வரையறைகளுக்கு அப்பாற்பட்ட பாலின வெளிப்பாடு உடைய நபர்கள். சில சமயங்களில், ஒருவரது பாலின வெளிப்பாடு காரணமாக அவரை பாலின அடையாளங்களுடன் ஒத்துப்போகாதவர்கள் என்று மற்றவர்கள் வரையறுக்கலாம். ஆனால் அந்த நபர் தங்களை அவ்வாறு அடையாளப்படுத்தி கொள்ளாதவர்களாகக் கூட இருக்கலாம். பாலின வெளிப்பாடு மற்றும் பாலின அடையாளங்களோடு ஒத்துப்போகாமல் இருப்பது போன்ற அம்சங்கள் தனிநபரோ |

| வ.எண். | சொல் (ஆங்கிலம்) | சொல் (தமிழ்) | விளக்கம் (ஆங்கிலம்) | விளக்கம் (தமிழ்) |
|---|---|---|---|---|
| | | | | சமூகமோ ஆண் தன்மை, பெண் தன்மை ஆகியவற்றை எப்படி அணுகுகிறது என்பதைப் பொறுத்து மாறுபடும். |
| 8. | Transgender person | மருவிய பாலினம் / மாறிய பாலினம் | Transgender person is someone whose gender identity does not match with the sex they were assigned at birth. People assigned male or female at birth, and intersex persons, can be transgender. A person is transgender whether or not such a person has undergone gender affirmation procedures like hormone therapy or surgery, as per the Supreme Court NALSA verdict (2014) and Transgender Persons (Protection of Rights) Act. Note: Do not use the term 'transgenders' or 'a transgender', i.e. as a noun. The word has to be used as an adjective. The correct usage is transgender person, trans | பிறப்பில் தரப்பட்ட பால் வகைமையுடன் தங்கள் பாலின அடையாளம் ஒத்துப் போகாதவர்கள் மருவிய பாலினம் / மாறிய பாலினம் ( இதுவரை திருநர் என்று வழங்கப்பட்டு வந்தது) என்று அழைக்கப்படுகிறார்கள். பிறப்பால் ஆண் அல்லது பெண்ணாக வகைப்படுத்தப்பட்டவர்களும், ஊடுபால்/ இண்டர்செக்ஸ்/ இடைப்பால் நபர்களும் மருவிய பாலினம்/ மாறிய பாலினத்தவர்களாக இருக்கலாம். உச்ச நீதிமன்ற NALSA தீர்ப்பு (2014) மற்றும் Transgender Persons (Protection of Rights) Act–படியும் தன்னை மருவிய பாலினம் / மாறிய பாலினத்தவர்களாக அடையாளப் படுத்திக் கொள்ளும் நபர் ஹார்மோன் சிகிச்சை அல்லது அறுவை சிகிச்சை |

| வ.எண். | சொல் (ஆங்கிலம்) | சொல் (தமிழ்) | விளக்கம் (ஆங்கிலம்) | விளக்கம் (தமிழ்) |
|---|---|---|---|---|
| | | | person, transgender woman, trans woman, transgender man, trans man, etc. depending on the context. | போன்ற பாலின உறுதிப்பாட்டு செயல்முறைகளை கட்டாயம் செய்திருக்க வேண்டும் என்கிற அவசியம் இல்லை. குறிப்பு : மருவிய / மாறிய பாலினத்தவர், திருநங்கை, திருநம்பி என இடத்திற்கு ஏற்ப அழைப்பதே சரியானது ஆகும். |
| 9. | Gender non-binary | பாலின இருநிலைக்கு அப்பாற்பட்டவர் | 'Non-binary' refers to a gender identity that doesn't ascribe to the woman-man binary. A 'non-binary' person is someone who does not identify as a man or a woman | ஆண், பெண் என்ற இருநிலைக்கு அப்பாற்பட்டவர்கள் பாலின இருநிலைக்கு அப்பாற்பட்டவர் என அழைக்கப்படுகிறார்கள். இவர்கள் ஆணாகவோ பெண்ணாகவோ தன்னை வகைப்படுத்திக் கொள்வதில்லை. |
| 10. | Gender dysphoria | பாலின முரண்பாட்டு மன உளைச்சல் | The psychological distress that results from an incompatibility between a person's self-perceived gender identity, and the gender they are associated with by society based on the sex they were assigned at birth.<br>Not all trans persons may | பிறப்பின் போது தரப்படும் பால் வகைமைக்கும் தான் உணரும் பாலின அடையாளத்துக்கும் இடையே முரண்பாடோ வேற்றுமையோ ஏற்படும் போது வரும் மன உளைச்சல் பாலின முரண்பாட்டு மன உளைச்சல் (Gender Dysphoria) என்று அழைக்கப்படுகிறது. இந்த உளைச்சல் சிறுவயதிலேயோ |

| வ.எண். | சொல் (ஆங்கிலம்) | சொல் (தமிழ்) | விளக்கம் (ஆங்கிலம்) | விளக்கம் (தமிழ்) |
|---|---|---|---|---|
| | | | experience gender dysphoria. Many may experience gender dysphoria from childhood, while others may experience it later - such as after puberty. | அல்லது பருவமடைந்த பிறகோ ஏற்படலாம். அனைத்து மருவிய / மாற்றுப் பாலினத்தவர்களும் பாலின முரண்பாட்டு மன உளைச்சலை எதிர் கொண்டிருக்க வேண்டும் என்கிற அவசியம் இல்லை. |
| 11. | Gender incongruence | பாலின முரண்பாடு | A marked and persistent incongruence between the gender felt or experienced by a person, and the gender associated by society with the sex they were assigned at birth | பிறப்பின் போது வழங்கப்படும் பால் வகைமையைப் பொறுத்து ஒரு சமூகம் ஒரு நபரிடம் எதிர்பார்க்கும் பாலினத்துக்கும், அந்த நபர் உணரும் பாலினத்துக்கும் இடையிலான அழுத்தமான தொடர் முரண்பாடு பாலின முரண்பாடு எனப்படும். |
| 12. | Gender affirmation procedures | பாலின உறுதிப்பாட்டு நடைமுறைகள் | Procedures that help an individual affirm their gender identity, including social (wearing clothes perceived to be closer to gender of choice, attempting to "live as the gender", medical (surgery, hormone, laser), and legal (changing their name and gender on paper) procedures. | பாலின அடையாளத்தை உறுதிப்படுத்தும் நடைமுறைகள் மருத்துவம் சார்ந்ததாகவோ, சட்டரீதியாகவோ மற்றும் சமூகப் பார்வை சார்ந்ததாகவோ இருக்கலாம்.<br>மருத்துவம்: அறுவை சிகிச்சை, ஹார்மமோன், லேசர் போன்றவை.<br>சட்டரீதியானவை: ஆவணங்களில் பெயர் அல்லது பாலினத்தை மாற்றுவது |

| வ.எண். | சொல் (ஆங்கிலம்) | சொல் (தமிழ்) | விளக்கம் (ஆங்கிலம்) | விளக்கம் (தமிழ்) |
|---|---|---|---|---|
| | | | | சமூகரீதியானவை: தாங்கள் அடையாளப்படுத்தும் பாலினத்துக்கு நெருக்கமான உடைகள், வாழ்க்கை முறைகள். |
| 13. | Gender Affirmation Surgery | பாலின உறுதிப்பாட்டு அறுவை சிகிச்சை | Surgery of external sex characteristics that help an individual affirm their gender identity, or 'look how they feel on the inside'.<br>It is recommended to use this term instead of sex reassignment surgery (SRS), which was used in the past. | ஒரு நபரின் பாலின அடையாளத்தை உறுதிப்படுத்த, "உள்ளுக்குள் அவர்கள் எப்படி உணர்கிறார்களோ" அதன்படியே வெளிப்புற பால் அம்சங்களையும் மாற்றியமைக்கும் அறுவை சிகிச்சை பால்மாற்று சிகிச்சை என்று முன்பு பயன்படுத்தப்பட்ட பதத்திற்கு பதிலாக 'பாலின உறுதிப்பாட்டு அறுவை சிகிச்சை' எனும் பதம் பயன்படுத்தப்பட வேண்டும் என்று பரிந்துரைக்கப்படுகிறது. |
| 14. | Deadname | பிறப்பு வழி பெயர் வழங்கப்பட்ட பெயர் | The name that was given to a transgender person by their family, and one by which they were identified. However, the transgender individual may no longer use that name.<br>The name a transgender person has 'left behind' or 'killed'. Usually, this refers to | பிறப்பின் போது தரப்பட்ட பால் வகைமையின் அடிப்படையில் மருவிய/ மாறின பாலினத்தவருக்கு வழங்கப்பட்ட பெயர் (குடும்பத்தினரால் வழங்கப்பட்ட பெயர்) மற்றும் மற்றவர்களால் அடையாளப்படுத்தப்பட்டுக் கொண்டிருந்த பெயர். அந்தப் |

| வ.எண். | சொல் (ஆங்கிலம்) | சொல் (தமிழ்) | விளக்கம் (ஆங்கிலம்) | விளக்கம் (தமிழ்) |
| --- | --- | --- | --- | --- |
| | | | the name they were given by their parents/guardians.<br>Note: While reporting, do not ask for a person's 'old name'or 'original name' or dead name. It is not an important detail the society needs to know, and mentioning a person's deadname in a story is disrespectful. Similarly, descriptions like "the man became a woman" or "the woman became a man" should be avoided. You must stick to the name they give you in all published reports. | பெயரால் மருவிய/ மாறின பாலினத்தவர்கள் தங்களை அடையாளப்படுத்திக் கொள்வதில்லை. மற்றவர்கள் அடையாளப்படுத்துவதையும் விரும்புவதில்லை.<br>குறிப்பு: குறிப்புகள் தரும்போது, " உங்கள் உண்மையான பெயர் என்ன? / பழைய பெயர் என்ன? " போன்ற கேள்விகளை தவிர்க்கவேண்டும். அது அவசியமில்லாத தகவல். குறிப்பில் மருவிய/மாறின பாலினத்தவரின் வழங்கப்பட்ட ( பிறப்பு வழி) பெயரைக் குறிப்பிடுவது அவரை இழிவுபடுத்துவதாகும். அவர் தன்னை எந்த பெயரில் வெளிப்படுத்த விரும்புகிறாரோ அந்த பெயரில் அடையாளப்படுத்துவதே போதுமானது. |
| 15. | Gender fluidity/Gender fluid person | நீர்ம / திரவ நிலை பாலின அடையாளம் | 'Gender fluidity' refers to a person's experience of not having a 'fixed' gender. A 'gender fluid' person may identify with all genders, | தனக்கு நிலையான ஒரு பாலினம் இல்லை என்று உணர்பவர்கள். எல்லா பாலினங்களுடனோ சில பாலினங்களுடனோ, இரு பாலினங்களுடனோ அல்லது |

| வ.எண். | சொல் (ஆங்கிலம்) | சொல் (தமிழ்) | விளக்கம் (ஆங்கிலம்) | விளக்கம் (தமிழ்) |
|---|---|---|---|---|
| | | | multiple genders, or with two genders (bigender). | இரு பாலினங்களில் ஏதேனும் ஒன்றோடோ இவர்கள் தங்களைப் பொருத்திக் கொள்ளலாம். |
| 16. | Cisgender | பாலியல்பு | A person whose gender identity conforms with the gender corresponding to the sex assigned at birth. A person who is not transgender or non-binary is cisgender. | பிறப்பின் போது தரப்பட்ட பால் வகைமையுடன் மற்றும் பாலினத்துடன் இவர்களின் பாலின அடையாளம் பொருந்தும். மருவிய/ மாறின பாலினத்தவர்களாக இல்லாதவர்கள் மற்றும் இருநிலைகளோடு ஒத்துப் போகிறவர்கள் மிகைபாலினத்தைச் சார்ந்தவர்கள். |
| 17. | Sexuality | மிகைபாலினம் | Sexuality refers to a person's behaviours, desires, identity and attitudes related to sex and physical Intimacy with others. | பிறருடனான உடல்ரீதியான அணுக்கம், பாலுறவு தொடர்பான விஷயங்களில் ஒருவரின் பழக்கவழக்கங்கள், விருப்பங்கள், அடையாளங்கள், அணுகுமுறை ஆகியவை பாலியல்பு எனப்படும். |

| வ.எண். | சொல் (ஆங்கிலம்) | சொல் (தமிழ்) | விளக்கம் (ஆங்கிலம்) | விளக்கம் (தமிழ்) |
|---|---|---|---|---|
| 18. | Trans woman or Transgender woman | திருநங்கை | "Transgender woman" refers to a person who was assigned male at birth, but whose gender identity is that of a woman. "Transgender woman" can be shortened to 'trans woman' (two words). | பிறப்பில் மற்றவர்களால் ஆணாக வகைப்படுத்தப்பட்டு தன்னை பெண்ணாக அடையாளப்படுத்தும் ஒரு நபர் திருநங்கை என்று அழைக்கப்படுகிறார்.<br>தன்னைத் திருநங்கையாக அடையாளப்படுத்திக் கொள்ளும் நபர் ஹார்மோன் சிகிச்சை அல்லது அறுவை சிகிச்சை போன்ற பாலின உறுதிப்பாட்டு செயல்முறைகளை கட்டாயம் செய்திருக்க வேண்டும் என்கிற அவசியம் இல்லை. |
| | Trans man or Transgender man | திருநம்பி | 'Transgender man' refers to a person who was assigned female at birth, but whose gender identity is that of a man. 'Transgender man' can be shortened to 'trans man' (two words). | பிறப்பில் மற்றவர்களால் பெண்ணாக வகைப்படுத்தப்பட்டு தன்னை ஆணாக அடையாளப்படுத்தும் ஒரு நபர் திருநம்பி என்று அழைக்கப்படுகிறார்.<br>தன்னைத் திருநம்பியாக அடையாளப்படுத்திக் கொள்ளும் நபர் ஹார்மோன் சிகிச்சை அல்லது அறுவை சிகிச்சை போன்ற பாலின உறுதிப்பாட்டு செயல்முறைகளை கட்டாயம் செய்திருக்க வேண்டும் என்கிற அவசியம் இல்லை. |

| வ.எண். | சொல் (ஆங்கிலம்) | சொல் (தமிழ்) | விளக்கம் (ஆங்கிலம்) | விளக்கம் (தமிழ்) |
|---|---|---|---|---|
| 19. | Heterosexuality / Heterosexual | எதிர்பாலீர்ப்பு<br>எதிர்பாலின ஈர்ப்பு<br>எதிர்பாலிர்ப்புடைய நபர், எதிர்பாலின ஈர்ப்புடைய நபர் | 'Heterosexuality' typically refers to the sexual attraction between men and women. A 'heterosexual man' or 'straight man' is a man who is attracted to women. A 'heterosexual woman' or 'straight woman' refers to a woman who is attracted to men.<br>'Heteroromantic' refers to romantic/emotional attraction, beyond just sexual attraction. This applies for cisgender and transgender persons. | ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையே வரும் பாலீர்ப்பு எதிர்பாலீர்ப்பு என்று பொதுவாக அழைக்கப்படுகிறது.<br>பெண்கள் மீது பாலீர்ப்பு கொள்ளும் ஆண் எதிர்பாலீர்ப்பு கொண்ட ஆண் என்றும், ஆண்கள் மீது பாலீர்ப்பு கொள்ளும் பெண் எதிர்பாலீர்ப்பு கொண்ட பெண் என்றும் வகைப்படுத்தப்படுகிறார்கள். பால் ஈர்ப்புக்கு அப்பாற்பட்ட, உணர்வு ரீதியான/ காதல்சார் ஈர்ப்பும் உண்டு. இது மிகைப்பாலினத்தைச் சேர்ந்தவர்களுக்கும் மருவிய/ மாற்றுப் பாலினத்தவர்களுக்கும் பொருந்தும். |

தமிழ்நாடு அரசு

வாய்மையே வெல்லும்